# முயல் மசால்

முயல் மசால் தென்னிந்திய தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ற பயறுவகை தீவனப்பயிராகும். வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. வருட மழை அளவான 450-840 மிமீ போதுமானது. அனைத்து மண்வகைகளுக்கும் ஏற்றது. புரதச்சத்தின் அளவு 15 முதல் 18 சதவீதமாகும். மானாவாரியில் கொழுக்கட்டைப்புல்லை முயல் மசாலுடன் 3:1 என்ற விகிதத்தில் கலப்புப் பயிராக பயிரிடலாம்.

## பயிர் மேம்பாடு

### 1. பருவம்

வடகிழக்கு மற்றும் தென் மேற்கு பருவ மழை காலம் விதைப்புக்கு ஏற்றது.

### 2. இரகங்கள்

ஸ்டைலோசான்தஸ் ஹெமேடா (ஒருவருடப்பயிர்)
ஸ்டைலோஸான்மஸ் ஸ்கேப்ரா (பல்லாண்டுப்பியர்)